Original Suit No. 585/2018 நாள்: 29.03.2023

வா.சா 2 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தாத்தா பெயர் நாச்சிமுத்துக் கவுண்டர். நாச்சிமுத்து கவுண்டருக்கு ஒரு சகோதரர் இருந்தார் அவர் பெயர் செங்கோடகவுண்டர். வழக்கின் 1வது பிரதிவாதி யார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் அவர் தான் சக்திவேல். 1ம் பிரதிவாதியின் மறுமகன் குப்புசாமியின் தாத்தாதான் மேற்படி சொங்கோடகவுண்டர் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பிரிவினையாகாத நிறைய சொத்துக்கள் தென்னிலை மேல்பாகம் கிராமத்தில் உள்ளது என்றால் ஆமாம். அதைப்பொறுத்து 1ம் பிரதிவாதியின் மருமகனுக்கும் மேற்படி சொத்துக்களை பிரிப்பதைப் பொறுத்து பிரச்சனை உள்ளது என்றால் எங்களுக்குள் பிரச்சனை எதுவுமில்லை. எனது கொள்ளுதாத்தா காலத்திலிருந்தே சொத்துக்கள் பிரிவினையாகாமல் தான் இருந்தது. எனது திருமணம் எனது 40 வயதில் தான் நடந்தது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு தீபா என்ற பெயரில் உடன் பிறந்த மூத்த தமக்கை உள்ளார். அவருக்கு திருமணமாகி 12, 13 ஆண்டுகள் இருக்கும். அந்த திருமணத்திற்கு உங்களை அழைக்கவில்லை என்றால் சரியல்ல, அந்த திருமணத்திற்கு என்னை அழைத்தார்கள் நான் சென்றேன். சொத்துசம்மந்தமாக 1ம் பிரதிவாதி மருமகனுக்கும் கடந்த 15 ஆண்டுகளாகவே பிரச்சனை உள்ளது அதை மனதில் வைத்து 1ம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. எனக்கு வயது 53 ஆகிறது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள 3 அயிட்டச் சொத்துக்கள் எவைஎவைகள் என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. தாவா 3 வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கி 20 ஆண்டுகளுக்குள்ளாகத்தான் இருக்கும். நீங்கள் பிறப்பதற்கு 5 வருடங்களுக்கு முன்பே அந்த சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஆகவே அப்பொழுது நடைபெற்ற விஷயங்கள் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி தோட்டத்தில் உள்ள மரங்களை விலைக்கு வாங்கி அதை வெட்டி விற்பனை செய்துவந்தார் என்றால் சரியல்ல. மேலும் 1ம் பிரதிவாதிக்கு 1965ம் ஆண்டுக்கு முன்பு எப்படியெல்லாம் வருமானம் வந்தது என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, சொல்லியிருக்கிறார்கள். 1, 2 அயிட்ட சொத்துக்களில் நிறைய வருமானம் கிடைத்தது என்று நீங்கள் நேரில் பார்த்தது போல் சாட்சியத்தில் சொல்லியிருப்பது தவறு என்றால்

சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மகன் மற்றும் மகள்கள் திருமணமானதிலிருந்து தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவர் மனைவியுடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா 3 வது அயிட்ட சொத்தை கருப்பண்ண கவுண்டர் மட்டுமே தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதிக்கு எந்த பாகமும் கிடையாது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்பட்டதிலிருந்து 1 வாரத்திற்குள் வாதிக்கு அந்த விபரம் தெரிந்து விட்டது. நீங்கள் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல.

<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>

மேற்படி குறுக்குவிசாரணையையே தங்களுக்கான குறுக்குவிசாரணையாக ஏற்றுக்கொள்வதாக 4, 5 பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்ததை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/- R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.